யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை (2) – 2020

தரம் - 08 | தமிழ்மொழி

பெயர் / சுட்டெண் : ..... திருமதி.வா.உதயராஜ் NDT (Tamil)

அறிவுறுத்தல்கள் :

- கேட்கப்பட்ட அனைத்து வினாக்களிற்கும் பதிலளிக்குக.
- வினாக்களுக்கான விடைகள் விடைத்தாள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களும் உரிய பாட அலகுகளை நன்கு கற்று விளங்கி பதிலளிக்க முயலுங்கள்.
- பாடசாலை தொடங்கும் போது விடைத்தாள்களை கோவையில் இட்டு வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

அலகு- 08 பசிப்பிணி மருந்து

பின்வரும் வினாக்களிற்கு விடை தருக.

1. பசி தீர்க்கும் வழியைக் கூறும் காப்பியம் எது?

   .....

2. பசிப்பிணியின் கொடுமையைப்பற்றி தீவதிலகையில் எவ்வாறு கூறுகிறது?

   .....

3. தீவதிலகையின் வேட்கையாக கூறப்படுவது யாது?

   .....

4. அமுத சுரபியின் சிறப்பு யாது?

   .....

5. அமுத சுரபியில் உணவு சுரப்பதற்காக யாரிடம் பிச்சை எடுக்க வேண்டும்?

   .....

6. காயசண்டிகையானவன் எவ்வாறான நோயினால் துன்புற்றான்?

   .....

7. காயசண்டிகையின் பசிநோய் எவ்வாறு தீர்ந்தது?

   .....

8. மணிமேகலை யாருக்குப் பயந்து காயசண்டிகை உருவில் தோற்றமளித்து சிறைச்சாலையில் உணவளித்தாள்?

   .....

9. அரசனுக்குரிய முக்கிய கடமையாக மணிமேகலை எதனைக் கூறுகின்றது?

   .....

10. மணிமேகலைக்கு வழங்கப்பட்ட பட்டம் யாது?

    .....

11. பசியைப் பிணி எனத் திட்டவட்டமாக குறிப்பிட்டவர் யார்?

    .....

www.ikedu.lk

அலகு- 09 ஆக்கிமீடீசு

1. இப்பாடத்தின் ஆசிரியர் யார்?

   .....

2. கியூஸ் நாட்டு அரசன் யார்?

   .....

3. ஆக்கிமீடீசு கண்டுபிடித்த விஞ்ஞானத் தத்துவம் எது?

   .....

4. மன்னன் பொற்கொல்லனுக்கு கொடுத்த வேலை என்ன?

   .....

5. இப்பாடத்தின் மூலம் கிடைக்கும் படிப்பினை யாது?

   .....

   .....

அலகு- 10 நாடகமே உலகம்

1. இப்பாடத்தின் ஆசிரியர் யார்?

   .....

2. உலக அனுபவங்கள் அனைத்தையும் நாம் எங்கே பார்க்கலாம்?

   .....

3. நாடகம் என்றால் என்ன?

   .....

   .....

4. இராம நாடகத்தில் காட்டப்படும் விடயம் யாது?

   .....

5. கட்டுரையில் கையாளப்பட்ட பாடலில் நாடகசாலை பற்றிக் குறிப்பிடப்படுவது என்ன?

   .....

6. "நாடகம் பாமர மக்களின் பல்கலைக்கழகம்" என்று கூறிய பெரியார் யார்? இவ்வாறு அவர் கூறியதற்கான காரணம் யாது?

   .....

7. கட்டுரையில் நடிப்பின் முக்கியத்துவம் ஆசிரியரால் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

   .....

8. எவற்றையெல்லாம் நாடகம் மூலமாக கற்பிப்பது சிறந்ததாக கூறப்படுகின்றது?

   .....

9. "உலகில் வாழும் மனிதர்கள் எல்லோரும் நடிகர்கள்' எனக் குறிப்பிடும் கட்டுரையாசிரியர் அதற்காக எடுத்துக்காட்டும் உதாரணங்களை சுருக்கமாக குறிப்படுக.

   .....

அலகு 11 சொல்லின் இசை.

1. மனிதனுக்கு இயற்கையாகவே பாடத் தெரியும் என்பதை எவ்வாறு உணரலாம்?

   .....

2. மனிதனால் இசையை அடியோடு துறந்துவிட முடியாமல் போவதற்குரிய காரணம் யாது?

   .....

www.lkedu.lk

3. இப்பாடத்தில் குறிப்பிடப்படும் பழமொழிகள் யாவை?

……..

4. எம்மால் பழமொழிகளை மறக்கமுடியாமைக்கான காரணம் எதுவென கட்டுரையாசிரியர் குறிப்பிடுகிறார்?

……..

5. சொற்களில் சில ஒலிகள் சேர்க்கப்படும் போது அதனை எவ்வாறு அழைப்பர்? உதாரணம் 5 தருக?

……..

……..

……..

……..

6. தெலுங்கு மொழியை எவ்வாறு சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது?

……..

7. இப்பாடத்தில் இசையின் முக்கியத்துவம் எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது?

……..

……..

8. சொல்லின் இசை என்ற பாடத்தின் ஆசிரியர் யார்?

……..

01) முற்றுவினைக்குரிய வரைவிலக்கணத்தையும், உதாரணங்கள் (5) தருக?

……..

……..

……..

02) எச்சவினையின் பிரிவுகளை குறிப்பிட்டு அவற்றிற்கு உதாரணம் தருக?

……..

……..

……..

03) ஓடிய மாணவன், படித்த பெண் இவை எவ் எச்சவினைக்குரியவை?

……..

……..

04) பாடி ஆடினாள், உண்டு மகிழ்ந்தாள், படித்து முடித்தாள் இவை எவ் வகை எச்சவினைக்குரியவை?

……..

……..

……..

05) ஏவல் வினை என்றால் என்ன? உதாரணம் 4 தருக?

……..

……..

……..

……..

06) ஏவல் வினையை எத்தனை வகையாக பிரிக்கலாம்? அவை எவை?

……..

……..

……..

www.lkedu.lk

07) நில், போங்கள், எடுங்கள், செய்துகாட்டு, பார்த்துக்கொள், வா, இவை எவ் வகை ஏவல் வினைக்குரியவை?

……..

……..

08) வியங்கோள் வினை என்றால் என்ன? உதாரணம் 2 தருக?

……..

……..

09) பின்வரும் சொற்களைக் குறிக்க வழங்கும் வேறு இரண்டு சொற்கள் தருக.

1. தோழன்	6. வலவன்
2. இனம்	7. வயல்
3. ஆகாயம்	8. நூல்
4. அடி	9. போர்
5. நிதி	10. ஆபரணம்

10) வாக்கியம் என்றால் என்ன?

……..

……..

11) வாக்கியத்தின் உறுப்புக்களை தருக?

……..

……..

12) பெயர்ச் சொல்லை தலைமை உறுப்பாக கொண்ட தொடரை எவ்வாறு அழைக்கலாம்?

……..

……..

13) வினைத்தொடர் என்றால் என்ன? உதாரணம் 2 தருக?

……..

……..

……..

14) பின்வரும் வாக்கியங்களிலிருந்து பெயர்த்தொடர், வினைத்தொடர் என்பவற்றினை இனங்கண்டு எழுதுக.

a. சங்கீதா இனிமையாக பாடுவாள்.
b. அண்ணா நாளை வருவார்.
c. உயரமான மனிதர் விரைந்து வருகிறார்.
d. செந்நிறப்பூக்கள் அழகாக காணப்படுகின்றன.
e. பலவர்ணப் பட்டங்கள் வானில் பறக்கின்றன.

15) எழுவாய், பயனிலை, செயற்படுபொருள், அடைமொழிகள் என்பவற்றைப் பயன்படுத்தி 5 வாக்கியங்கள் அமைக்குக.

……..

……..

……..

16) பிறந்த நாள் அழைப்பிதழ் ஒன்று தயாரிக்குக.

17) நவீன தொழினுட்பத்தின் வளர்ச்சியும் வேகமும் என்ற தலைப்பில் (150-200) சொற்களிற்கு குறையாமல் கட்டுரை எழுதுக.

18) ஊழஎனை 19 வைரசினால் ஏற்படும் தாக்கங்களும், அவற்றிலிருந்து எவ்வாறு எம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி உமது நண்பனுக்கு 75 சொற்களிற்கு குறையாமல் கடிதம் எழுதுக.

www.ikedu.lk